//அவசரம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்
ந.க.எண்.4118 /அ4/2025, நாள்.13.08.2025

---

பொருள் : பள்ளிக் கல்வி – மிதிவண்டிகள் –2025–2026 ஆம் கல்வியாண்டு – 11ம் வகுப்பு பயிலும் அனைத்து இன மாணவ/மாணவியர்களுக்கும் விலையில்லா மிதி வண்டிகள் வழங்கும் திட்டம்– விவரங்கள் கோருதல்– தொடர்பாக.

பார்வை : சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.036425/இ/இ1/2025, நாள்.12.08.2025

-----

வேலூர் மாவட்டம், வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் ஆளுகையின் கீழ் செயல்படும் அனைத்து வகை அரசு/அரசு உதவிபெறும் பள்ளிகள்/பகுதி உதவி பெறும் பள்ளிகளில் 11–ஆம் வகுப்பு பயிலும் அனைத்து இன மாணவ/மாணவியர்களுக்கும் (SC/SCA/ST/MBC/&DNC/BC/OC) 2025–2026 ஆம் கல்வியாண்டில் மிதிவண்டிகள் வழங்கிடும் பொருட்டு இத்துடன் இணைப்பில் காணும் Google Sheet –ல் நாளை 14.08.2025 முற்பகல் 11.30 மணிக்குள் பதிவுகள் மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் (பள்ளியுடன் இணைந்துள்ள விடுதிகளில் (Residential schools) தங்கியுள்ளோர் மற்றும் பள்ளியும் விடுதியும் ஒரே வளாகத்தில் அமைந்துள்ள (Schools and Hostels are in the same campus) விடுதியில் தங்கியுள்ளோர் ஆகிய மாணாக்கர்களை தவிர்த்து) 01.08.2025 நிலவரப்படி 11–ஆம் வகுப்பில் பயிலும் மாணாக்கர்களில் மிதிவண்டி பெற தகுதிவாய்ந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை மற்றும் 2024–2025இல் மிதிவண்டிகள் இருப்பு விவரம் மற்றும் நிகர தேவைப்பட்டியல் ஆகிய விவரங்களை இணைக்கப்பட்ட (EXCEL – LEGAL SHEET) படிவத்தில் பூர்த்தி செய்து 2 நகல்களில் 14.08.2025 மாலை 3.00 மணிக்குள் இவ்வலுவலக நேர்முக உதவியாளர்(மேல்நிலைக்கல்வி) அவர்களிடம் மறுநினைவூட்டிற்கு இடமளிக்காமல் நேரில் ஒப்படைக்குமாறு அனைத்து வகை அரசு / நிதியுதவி / ஆதிதிராவிட நல / நகராட்சி மேல்நிலைப்பள்ளி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு–

1. படிவம்
2. Google sheet Link

//ஓம் .சு .தயாளன்//

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள் அனைத்து வகை அரசு / நிதியுதவி /ஆதிதிராவிட நல / நகராட்சி/மேல்நிலைப்பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.

நகல் : வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) தொடர் நடவடிக்கையின் பொருட்டு